முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1664

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.04.2024**, வெள்ளிக்கிழமை

1. ஞான தேகம் கொண்ட அரங்கா
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா
வானவர்கள் மெச்சுகின்ற குருராஜா
வள்ளலே வையகத்தை தர்மத்தால் காக்கின்ற அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 06 ம் நாள், 19.04.2024, வெள்ளிக்கிழமை)
வரங்களாக அரங்கனுள் யான் கலந்து வையகத்தை
வழிநடத்தும் மகா குருவாய் செயல்படுகின்றேன்
3. ஆகவே அரங்கனுக்கு கலியுகத்தில்
சிறந்த ஞானி எனும் ஆற்றலும்
அரங்கன் தர்மத்துக்கு கலியுகத்தில்
சிறந்த தர்மம் என்கின்ற சக்தியும்
4. வரமாக ஆறுமுகன் யான் தந்துள்ளேன்
வல்லமைபட ஓங்காரக்குடிலை நோக்கி
மக்கள் வந்தால் போதும்
உலகுக்கு மாற்றம் தருகின்ற சூட்சுமம் விளங்க நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தர்மசாலைகளை
நிலவுலகமெங்கும் நிரப்பினால் போதும்
வறுமை உலகை விட்டு ஓடும்
வையகத்தில் தர்மபலம் கூடும்
6. கூடக்கூட மக்களிடை குறுகிய மனப்பான்மை
சுயநலமான செயல்பாடுகள் அத்தனையும் அகன்றோடி
பொதுநலம் தர்மபலம் தன்னார்வத் தொண்டு
என்கின்ற மகத்துவம் கூடி

7. கூடியே உலகோர் எல்லாம்
குரு அரங்கன் வழிகாட்டலில்
நாடெங்கிலும் ஞானவான்கள் நிரம்ப
நல்லத் தலைமைகளை உருவாக்கி
8. ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி
ஞானபண்டிதன் யானே தலைமை ஏற்றுகின்ற அற்புதமான
நல்லாட்சியாக மலர வழிவகை உருவாக நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—